புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது

# இந்து சாதனம்.

## THE HINDU ORGAN.

ஸ்தாபிதம் (1889)

['ரெலிபோன்' இல. 56]

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | ரூ. | 5-00 |
| இலங்கை, இந்தியா: | " ரூ. | 8-00 |
| தொலைப்பகுதி: | " ரூ. | 9.00 |
| தனிப்பிரதி: | | சதம் 5 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவைகேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்"

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:—ஒருகலம் | | ரூ. 10-00 |
| " | அரைக்கலம் | ரூ. 5-00 |
| " | கால்கலம் | ரூ. 3-00 |

அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—சஙு. } யாழ்ப்பாணம்;-பிரசோற்பத்தி௵ புரட்டாதி௴ கஉஉ, (1931 செப்டெம்பர் 28உ) திங்கட்கிழமை. { இலக்கம்—உ௫

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
செம்பூத்த வீகமாக மங்க வோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த வெளனத்த நினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலெனஞேது
மதம்பூத்தவிநாயகன்றன் வணங்கிவாழ்வாம்

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

---



தங்க மெடல்கள் பெற்ற
ஐரோப்பிய மதுரைக் கம்பனியாரால்
செய்யப்படும்,
திறமான குடை அடையாளமுள்ள

## கொழுக்கி ஓடுகள்.

மதுரைக் கம்பனியார் சிறந்த குடை அடையாளமிட்டு இந்த ஓடுகளை வெகு பணிக்காய் அமைத்திருக்கிறார்கள். வெயில், மழை, நெருப்புக்கு இதிலும் மேலான பாதுகாப்பு உபகாரணம் வேறொன்றில்லை. பல தொழில் நிபுணரின் பரிசோதனையால் இதன் இயற்கை மெச்சப்பட்டது. இதுவரை 10 தங்க மெடல் பரிசுக்குக் கம்பனியாரைத் தகுதியுடையவராக்கிப் புகழ்பெற்றது. மிக இலேசானது மலிவானது. ஒவ்வொரு ஓட்டிலும் குடை அடையாளம் விளங்கும். காங்கேசன்துறையிலே கவமாகக் கட்டப்படும் அரசினரின் சுகஸ்தான கட்டடங்களுக்கென இக்குடை அடையாள முள்ள 55,000 ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன

இந்த இனத்திலே கண்ணாடி ஓடுகளுமுண்டு

ஜே. செருபிம் அன்ட் பிறதர்,
ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.
(Y. 9 8 1—31 12 31.)

## ஸ்ரீகதிரைமலைத் திருப்பணி.

கலிவிருத்தம்.

திருமலிந்திடு தென்னிலங்கையின்
மருவுசண்முகன் மலையினன்பணி
புரியவேசிறு பொருள்கள்வேண்டுநீர்
அருளியாங்கவனருள் பெற்றுய்மினே.

தருமசீலர்களே!

உலகிலுள்ள எவ்வகை ஆத்மாக்களுக்கும் தம்முடைய அருட்செல்வத்தை வரையாது கொடுக்கும் வள்ளலாகிய அறுமுகப் பெருமான் கோவில் கொண்டருளிய ஸ்ரீகதிரைமலையிலமைந்திருக்கும் விவேகானந்த மடத்தில் தாகமுற்றடைந்தோர்க்குத் தாக சாந்தி செய்விக்கப்பட்டு வருகிறது. அன்றியும் முன்னே அம்மலைக்குச் செல்வோர்க்கு அதிக கஷ்டத்தை விளைத்த சுற்று வழிகளை நீக்கி இப்போ அதிக சமீபமாகிய வழியைத் திறந்து நூற்றைம்பது படி வரையில் பல பெரியோர்களது முயற்சியினலும், திரவியோபகார சகாயத்தாலும் செவ்வனே கருங்கற் கட்டிடமாய் கட்டப்பெற்றுள்ளது. எஞ்சிய கருங்கற் கட்டிடத்திருப்பணியைமுற்றுவித்தற்குஇப்போது பொருளுதவிவேண்டும். ஆகையால் பணம் அனுப்புவோர், தெளிவாகத் தங்கள் விலாசத்தை யெழுதி கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—R. சிந்தாமணி அவர்கள்,
கச்சேரி யாழ்ப்பாணம்,
மேற்பார்த்து ரவண சங்கு சாது வசம் கொடுப்பது.
(H. Y. 9. 8-6\7 12-31)

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகனைவருக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன சுகத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாரா, பிதாரூ, சாலாமுஸ்லி, சப்பேமுஸ்லி, பிஸ்தா, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, சீர்முள்ளிக்கொடு, சாரப்பூ வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகளைச் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனுல் மேகிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, இருவருகுத்தல் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம் கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, கர்ப்ப அறையில் உண்டாகும் கோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைரூத்தலுக்கு ரூபா ௧0. கால் ரூத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தேசவாசிகள் சிலோன் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினல் முன்பணம் ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சுதேச ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை
[illegible] பேஸ்பு,
[illegible] மட்டக்களப்பு,
(Y. 75. [illegible]) இலோன்.

---

## திறம் கொளுக்கி ஓடுகள்,

மோர்கன், நட்சத்திரம் 14, இஞ்சுப் பக்கா ஓடு முதலியன அடைமழைக்குங்கசியா. அண்டப் பார்த்தாப் போலக் கூரையில் அடுக்கலாம். பாரங்குறைவு, பெலனதிகம்; நல்ல அழுத்தமான இந்த ஓடுகள் 125 போட்டால், மற்ற ஓடுகள் 150 போடுகிற இடத்தை மூடும்.

விற்கும் இடங்கள்:—
யாழ்ப்பாணம்:—
மு. இராசேந்திரமூப்பர்
கிட்டங்கித்தெரு.
பரித்தித்துறை:—
மு. நமசிவாயம்
கடைத்தெரு.
ஊர்காவற்றுறை:—
கரம்பன்.
திருக்கோணமலை:—S. சின்னையா
வில்லூண்டி.
(H 12, 10 1 32.)

---

## உயர்தரமான தமிழ் நூல்கள்!

(1) தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு மெய்கண்ட விருத்தியுரையுடன் ரூ. 4 (2) பட்டினத்துப்பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய பிரபந்தத்திரட்டின் விருத்தியுரை ரூ. 3½. (3) திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், தெளிபொருள் விளக்கப் பதவுரையும், விசேஷக்குறிப்புகளுடன் ரூ. 4 (4) விநோதரசமஞ்சரி ரூ. 2. (5) அராபிக்கதை ரூ. 2½. (6) பழமொழியகராதி ரூ. 3. (7) ஆத்திசூடிப்புராணம் ரூ. 2. (8) கல்லாடம் மூலமும் உரையும் ரூ. 3. (9) காலடியார் ரூ. 2. (10) நைடதம் மூலமும் விருத்தியுரையும் ரூ. 4. (11) ராமகிருஷ்ணபரமஹம்ஸர் விரிவான சரித்திரம் ரூ. 3.

தமிழ்புத்தகங்களுக்கு
→ இனும் ←
ஒற்றுமை ஆபீஸ்.
2. சைதாப்பேட்டை, மதருஸ்.

ஒற்றுமை ஆபீஸ், சைதாப்பேட்டை, மதராஸ்

(Y 7 7 9—8 9-32)

---

Established 1909. **A. S. M. A. Khader Brothers**

மருந்தேயாயினும் விருந்தோடுண், என்ற ஔவைப்பிராட்டியாருரைப்படி

இந்த விளம்பர முழுதும் தாங்களும் வாசித்து
தங்கள் சிநேகிதர்களுக்கும் வாசித்துக் காண்பியுங்கள்.

குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக்கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

மாறுபாடில்லாதவுண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடில்லையுயிர்க்கு. (குறள்.)

தன்பமுறுவது நம்முயிரேயாதலால் மூலவாதத்தோஷத்தாலும் பிணிவாராதளவில் தடுப்பதற்காகிய நல்லவிதமாகிய அவிழ்தங்களை உண்டவர்களுக்கு பிணிகளால் துன்பமில்லையென திருவள்ளுவநாயனர் கூறிய திருக்குறளைபுணர்ந்த அறிவிற்சிறந்த அன்புடையோரே அருந்தக்கடவர்களாக.

### நாதங் கெட்ட தேகத்தைக் காக்கும்; நாட்பட்டரோகத்தைப் போக்கும்.

உங்கள் பணத்திற்கும் மருந்தின் குணத்திற்கும் உத்தரவாதமளிக்கப்பட்டது.
கிகரற்றது! குணமுற்றது!! மகிழ்வுற்றது!!! புகழ்பெற்றது!!!!

## ஜீவானந்த தாது விர்த்தி லேகியம்.

ஓ! அன்பர்காள்!! ஒருவனுக்கு வீரியத்தில் ஏதேனும் விகற்பமுண்டாயிருக்கின் அவன் எவ்விதசந்தோஷத்திற்குரியவனுயினும் வீரியக்கெடுதலின் காரணார்த்தமாகவே அவன் மனதிற்கு மேலும் மேலும் விசனத்தைத்தான் உண்டாக்கச்செய்யுமென்பது ஆயுர்வேத சாஸ்திரங்களின் துணிபுந் தவிர, இராஜாங்க வைத்தியர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். அதவே, நபுஸகம், அல்லது பேடித்தனமென்று சொல்லப்படும் அவ்விததுக்ககரமான கொடிய வியாதியை அடியோடுதொலைத்து உலகின் வாழ்க்கையில் என்றக்காணுத ஆனந்த சுகாதாரவின்பத்தையடையச் செய்விப்பதில் இந்த ஜீவானந்த தாது விர்த்தி லேகியமே மிகவுஞ் சிறந்தது. இந்த லேகியத்தின் முக்கிய குணமாவது: இளமைப் பருவத்தில் பற்பல துர்ச்செய்கைகளினல் நடுப்பிராயத்தில் தேஹபலங்குன்றி நரம்புகள் தளர்வடைந்து இரத்தம் கெட்டுப்போய் சந்தானவிர்த்தியில்லாமல் வயோதிகர்போல் மயங்கிநிற்கும் புருஷர்களும், வாதாதி மூவகை தோஷத்தால் உஷ்ணமுண்டாகி பிரமேகச்சூட்டால் சாதமடைத ஜலம்போல் நீற்று, கைகாலசந்தி மலசிக்கல், பசியில்லாமை, ஜீரணக்குறைவு, சித்திராபங்கமென்னும் ஸ்கலிதம், துரிதஸ்கலிதம், மூளையின்கொதிப்பு கண்ணெரிவு, தேகஅனல் இடுப்புவலி, நீர்கடுப்பு, நீரெரிச்சல், நீர்சுருக்கு முதலிய சர்வரோகங்களையும், நோய்க்குத் தக்கபடி 40, அல்லது 20 நாளில் பூரணமாய் சுகப்படுத்தி, இரத்தத்தை சுத்திசெய்து தங்கள் தங்கள் சுபாவத்திற்கு மேலான வீரியத்தையும், மனவுற்சாகத்தையும் உண்டாக்கி, இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, தேகசக்தி, சந்தானவிர்த்தி, முதலிய நலன்களைச் செய்வதில் இதுவே மேலானதென்றும் கடவுளுக்குப் பொதுவாய் உறுதியாகச் சொல்லுகின்றோம். அப்படி இதில் சுருக்கமாய் காட்டியுள்ள குணாலத்திற்கு மேற்கொண்ட பலனையடையவில்லையென்று கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின்பணத்தை உடனே வாபீஸ் செய்விக்கப்படும். அப்படி ஷை கிரயத்தை கொடுக்கத் தவறினுல் கோட்டுமூலமாக வசூல் செய்து கொள்ளலாம். மேலும் இம்மருந்தின் குணாலத்தைப்பற்றிச் சந்தேகிக்கிறவர்கள், நமது மருந்தாலயத்திற்கு நேரில்வந்து தங்கள் தங்களுக்குரிய சந்தேகத்தை போதுமானவரையுமுள்ள நிவாரணைச் செய்துகொண்டு வாங்கலாமென்பதாயும் திண்ணமாய் கூறுகின்றோம்.

40 நாள் 80 வேளை டப்பி 1-க்கு கிரயம் ரூ 8 0 0
பரீட்சிக்க 20 நாள் 40 வேளை டப்பி 1-க்கு ரூ 4 0 0

வீ பி தபால் சார்ஜ் பிரத்தியேகம், முற்பணமனுப்பினல் வி. பி. தபால் செலவு இனமாய் அனுப்பப்படும். பினங்கு, சிங்கப்பூர், இரங்கூன், சிறம்பான், கோலாலம்பூர் ஆகிய ஐக்கிய மலாய்நாட்டு வாசர்களும் மருந்தின்கிரயமும் தபால் செலவு ரூ 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷை பிறதேசஸ்தர்கள் அட்வான்ஸ் அனுப்பினுல், பாக்கி தொகைக்கும் வி. பி. யில் அனுப்புவோம். ஆர்டர் செய்பவர்கள் இப்பத்திரிகையின் பெயரை குறிப்பிட்டெழுதவும்.

Our Sole Agent:
P. M. Abdulcader Esqs,
Ceylon Post Agency
No. 105, Piachaud's Lane Maradana,
Colombo, Ceylon.

எமது விலாசம்:
☞ ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைதல்முஸ்லிமீன் மெடிக்கல் ஹால்
பறங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா,
இந்தியா.

(Y. 15. 6-7-31—5-7-32)

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: பிரசோற்பத்திஞ புரட்டாதிமீ ௨௨௨ திங்கட்கிழமை.

## வரிமதிப்புக்காரரும் அரசாட்சியாரும்.

யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள் இருக்கும் வீடுகள், கடைகள், நிலங்கள், வயல்கள் முதலானவைகளின் வருடாந்தப் பெறுமதி யென்னவென்பதை மதிப்பிட்டுச் சொல்வதற்காக 4 பேர் இப்பொழுது நியமனம் பெற்றிருக்கின்றனர்.

இவர்கள் யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள் இருக்கும் ஒவ்வொரு ஆதனத்தையும் போய்ப்பார்த்து, அவற்றின் வரும்படி நிலைமையை விசாரணைசெய்து இப்பொழுது அவைகள் எவ்வளவு வரும்படியை வருடா வருடங் கொடுக்கக் கூடியனவாயிருக்கின்றனவென்பதை அரசாட்சியாருக்கு அறிவிக்க வேண்டியவர்களாவர். இப்படியான வேலையை இவர்கள் இனமாகச் செய்வதல்ல. இவ்வேலையைச் செய்வதற்கு அரசிறைவருமானத்திலிருந்து பணம் உதவப்படுகின்றது. இந்த அரசிறை வருமானமோ, குடிசனங்கள்கொடுக்கும் பணமாகும். ஆகவே குடிசனங்களின் பணத்தை வேதனமாகப் பெற்றுக்கொண்டு இந்த மதிப்புக்காரர் வரிமதித்தற்காக நியமனம் பண்ணப்பெற்றிருக்கின்றனர்.

இவ்வாறு நியமனம்பெற்ற இந்த மத்தியஸ்தர்களின் கடமையென்ன. இவர்கள் தாம் மதிப்பிடும் ஒவ்வொரு ஆதனத்தையும் பார்க்கவேண்டும். பார்த்த ஆதனங்கள் சென்ற வருடத்தில் கொடுத்தவரும்படியைக் கொடுக்கின்றனவாவென்பதை நன்கு ஆராயவேண்டும். அப்படி ஆராய்ந்து கண்ட முடிவையே தாங் கொண்ட மதிப்பாகப் பதிவு செய்து வைத்தல்வேண்டும்.

யாழ்ப்பாணத்திலேயுள்ள ஆதனங்களில் அநேகம் தென்னையின் வருமானத்தைக் கொண்டவைகளாகும். இத்தென்னையின் வருமானமோ இவ்வருடம் ஒன்றுக்குக்காலாகக் குறைந்துவிட்டது. அறுபது ரூபா எழுபதுரூபா விற்ற 1000 தேங்காய் இப்பொழுது இருபது அல்லது பதினைந்து ரூபாவாக விற்கிறது. இப்படியான வரும்படியுள்ள நிலங்களுக்குச் சென்றவருட மதிப்பைப்போடுவது பொருந்தாது. மேலும், கடைகளெத்தனையோ மூடப்பட்டுவிட்டன; எத்தனையோ முன்பெற்ற வாடகையிலும் நாலிலொன்றுதானும் கொடுக்காதிருக்கின்றன. உதாரணமாகச் சிவன்கோவிற் தெற்குவீதியில் உள்ள செட்டிப்பிள்ளைகள் கடைவைத்திருந்த கடைகளிற்சில இப்பொழுது அச்சுக்கூடங்களாகவும் சாப்பாட்டுக்கடைகளாகவும் மாறிவிட்டன. ஆனால் வாடகை முன்னிலும்பார்க்க மிகமிகக் குறைந்திருக்கின்றது. சிலகடைகள் எவ்வித வாடகையுமின்றிப் பூட்டப்பட்டு வௌவால் குடிகொண்டனவாகக் காணப்படுகின்றன. இவைகளுக்கும் இவைபோன்றனவாய்ப் பட்டணமெங்கும் விரவியிருக்கும் இடங்களுக்கும் வருடவரும்படி விதிப்பதானால் இவ்வருட மதிப்பாளர்களுக்கு மிகக்கஷ்டமானதும் பொறுப்பானதுமான வேலையிருக்கின்றது. அப்படியிவர்கள் தமது பொறுப்பையுணர்ந்து கஷ்டத்தைப்பாராது நன்கு விசாரணைசெய்து மதிப்பிடுவார்களெனவே சனங்கள் காத்திருக்கின்றனர்.

கொழும்பு நகரபரிபாலனசங்கத்தார் இவ்வருடம் பூட்டப்பட்டு உபயோகமற்றுக் கிடக்கும் கடைகளுக்கு வரிபெற்றுக்கொள்வதில்லையென முடிவெடுத்திருக்கின்றனர். கழுத்துறைப் பட்டினபரிபாலனசங்கத்தார் சில கைத்தொழிற்சாலைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த வரியை முற்றாய் நீக்கிவிட்டனர். எமது அரசாட்சியாரும், உத்தியோகத்தவர்களுடைய வேதனத்தைக் குறைக்கவேண்டுமென்னும் நோக்கமுடையவர்களாயிருக்கின்றனர். இங்கிலாந்திலே உத்தியோகத்தர்களின் வேதனங் குறைத்தாகிவிட்டது. ஜோர்ஜ்வேந்தரும் தமது சொந்தச் செலவிலே 50000 தங்கப்பவுண் குறைத்துவிட்டனர். இளவரசரும் தமது சொந்த வரும்படியிலிருந்து ஒருபெருந்தொகை அரசாட்சிக்குக்கொடுத்துதவுகின்றனர். அவுஸ்திரேலியா நாட்டிலே வரிகள் குறைக்கப்பட்டு உத்தியோகத்தர்களின் வேதனங்களுங் குறைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இப்பொழுது பணமிடியும் பொருள் முட்டும் உலகெங்கணும் பரவியதொன்றாகக் காணப்படுகின்றது.

இதை நன்குயோசித்தே நமது யாழ்ப்பாணப் பட்டணபரிபாலனசங்கமும், வரிகளை நோக்கம்போலக் குறைக்கவேண்டுமென ஒரு தீர்மானமும் நிறைவேற்றியிருக்கின்றனர். இனி, இப்பொழுதே வரிப்பணங் கொடுத்துக்கொள்ளக் கஷ்டப்பட்டுச் சில இடங்களிற் சனங்கள் சஞ்சலமுறுகின்றார்கள். சில இடங்களில் வரியறவிடுவோர் செம்பு குடம் முதலிய பொருள்களைத்தானும் தூக்கிக்கொண்டு செல்லுகிறார்களெனப் பேசிக்கொள்ளுகின்றனர்.

இவைகளையெல்லாம் நன்கு நடுநிலைமையுடன் சிந்தித்து வரிப்பணம் மதிப்பிடும் தொழிலைக் கையேற்றவர்கள் பட்சபாதமின்றிப் பயமின்றித் தமது பரிசுத்தமான நம்பிக்கைப் பொறுப்புக்குரிய கடமையைச் செய்வார்களென நம்புகின்றோம்.

மேலும், மதிப்பிடுபவர்கள் மதிப்பிட்ட தொகையில் திருப்தியற்றவர்களாயிருக்கும் ஒவ்வொரு குடியானவரும் உடனே தமது திருப்தியீனத்தை அதிகாரிகளுக்குத் தெரிவித்தல் அவசியம். இப்பொழுது பட்டணபரிபாலனசங்கத்திற்கு அங்கத்தவர்களாக அபேட்சித்து முன்வந்திருப்பவர்களும் இது விஷயத்தில் கருத்துடையவர்களாயிருப்பார்களெனக் கேட்கின்றோம்.

## பட்டின பரிபாலன சங்கம் எதற்கு?

நமது யாழ்ப்பாணப் பட்டினம் இவ்வளவு விஸ்தீரண முடையதென வகுத்து அவ்வகுப்பில் வயல்கள், மக்கிக் கிடங்குகள், கல்லுக் குழிகள், வெளி நிலங்கள், பனை வடலிகள் யாவற்றையுஞ் சேர்த்து அவைகளுக்கெல்லாம் வரியும் விதித்து அவ்வரிப்பணத்தை அறவிடுவோர்களையும் வைத்து ஏழைகளிடம் கதறக்கதற அறவிட்டு பொக்கிஷத்தை நிரப்பிக்கொண்டு, சொற்பபேரைலிகிதர்களாகவும் காரியதரிசியாகவும் வைத்து அவர்களுக்கும் இவ்வரிப்பணத்தில் ஒரு பாகத்தைக் கொடுத்து, இன்னும், மும்மூன்று வருடங்கட்கொருதரம் பரிபாலன சங்க அங்கத்தவர்கள்தேர்தலென உண்டுபண்ணி, மோட்டர் ரதங்களுக்கும் பெற்ரோல் எண்ணெய்க்கும் வருவாயை யுண்டாக்கி யாழ்ப்பாணத்தின பணத்தைச் சுலபமாக அமெரிக்கக் கோமஸ்வார்களிடம் போகப்பண்ணி, மேலும், பட்டின வட்டாரங்களிலுள்ள சனங்களுக்கு இத்தேர்தல் விஷயமாக மனஸ்தாபங்களையும் விரோதங்களையு முண்டுபண்ணி, இப்படியெல்லாம் கஷ்டநிஷ்டூரங்களை யனுபவிக்கப்பண்ணி இந்தச் சிறந்த யாழ்ப்பாணப் பட்டினம் பெற்றுக்கொண்ட நன்மையாது? மோட்டர்ரதங்களில் குப்பையேற்றப்படுகின்றது. பெரும் பொருள் செலவு செய்து மின்சாரதீபம் அமைக்கப்பெறுகின்றது. வருடத்திற் கொருமுறை யிருமுறை ஒரு மோட்டர்ரதம் தெருக்களிற் தண்ணீர் தெளிக்கின்றது இவற்றையன்றி வேறெந்தச் சுகத்தையும் யாழ்ப்பாணப் பட்டின வாசிகளாகிய நாங்கள் அநுபவித்தோமா?

இப்பொழுதும் அடுத்த டிசம்பர்மாசத்தில் பட்டின பரிபாலன சங்கம் புதுத்தேர்தல் நடைபெறப் போகின்றது. "பரோபகாரார்த்தம் இதம் சரீரம்" என்ற ஆரிய முதுமொழிப்படி பிறருக்கு உபகாரஞ் செய்வதற்காகவே இத்தேகத்தை நாம் எடுத்தோம் என்று கூறிக்கொண்டு அநேகபட்டினவாசிகள், சங்கத்தின் அங்கத்துவத்தை யபேட்சித்து வெளிப்போந்திருக்கின்றனர். வெளிப்போந்துமாத்திரத்தோடமையாது வீடுவீடாயலைந்து வீடுகளிலுள்ளாரை அப்படிச் சொல்லி இப்படிச்சொல்லி, நான் அங்கத்தவராக வந்தால் அதுசெய்வேன் இதுசெய்வேன் என வழக்கம்போலப் பழையபஞ்சாங்கத்தைப் பரப்பத் தொடங்கிக்கொண்டனர். இந்த அங்கத்தவர்கள் அரசாங்கசபை அங்கத்தவர்கள் போல வேதனம் பெறுபவர்களல்லர். ஆயினும் இவர்கள் தமது நேரத்தையும் பொருளையும் அந்தஸ்தையும் செலவுசெய்து இவ்வங்கத்துவத்தை நாடுவதின் நோக்கமென்ன? இது அன்று தொடக்கம் இன்றுவரையும் எமக்கு ஒரு மறைபொருளாகவே யிருக்கின்றது.

இப்படியாக வருபவர்கள் தந்நுவாநுபவத்தை ஆசித்தே வருகின்றார்களோ எனின், அதுவும் கிடையாதே. இவர்களுக்கு அதிகாரத்தை கிருவகிக்கும் தத்துவமிகலையே இவர்கள் அப்படிச்செய்யலாம் இப்படிச் செய்யலாம் என்றுசொல்லலாம், சொல்லுவதோடமையாது சிறு பிரசங்கங்கள் செய்யலாம், அதோடும் நில்லாது. தீர்மானங்களை நிறைவேற்றலாம், அத்தீர்மானங்களை அதிகாரிகளுக்கு தெரிவிக்கலாம். அத்துடன் எங்கள் பட்டின பரிபாலன சங்கத்தின் வேலை முடிந்துவிட்டது. இவர்கள் செய்த தீர்மானங்களைக் கொண்டு நடத்துவதற்கு இவர்களுக்கு அதிகாரமில்லை.

இற்றைக்குச் சிலநாட்களுக்குமுன் இப்பட்டின பரிபாலன சங்கத்தார் பெரிய கடையிலிருந்து சிவன்கோவிற் தெற்கு வீதிவரையிலுள்ள தெருவால் மோட்டர் ரதங்கள் தெற்கேயிருந்து வடக்கேபோகலாம், வடக்கேயிருந்து தெற்கே போகக்கூடாது என்னும் கட்டளையை நிறைவேற்றினார்கள், இதைப் பொலீசாருக்குக்கும் அறிவித்தார்கள். ஆனல் இன்னும் வடக்கேயிருந்து தெற்கேபோகும் ரதம் மிட்டாய்க் கடைச்சந்திக்கு அணித்தாகச் சென்று ரதச்சாரதி அங்கு நிற்கும் பொலிஸ்காரனுக்கு நேரே தெற்கை நோக்கி தானபோக வேண்டுமென்றகைக் குறிப்பைக் காட்ட, பொலிஸ்காரனே சரிசொல்லிப் போகும் படிக்கைகாட்டுகிறான் அப்பொழுது, பரிபாலசங்கஞ் செய்த கட்டளையின் பிரயோசனம் என்ன. சட்டம் செய்பவன் சட்ட நிருவாகம் பண்ணுஞ் சக்தியுடையவனாயிருப்பினன்றி சட்டஞ் செய்வதும் பரித்தியகாரன் உளறுவதும் ஒருவகுப்பைச் சேர்ந்த ஒரு நோயென்றே கூறக் கிடக்கின்றது இதுவிஷயமாக நாம் எமது சங்கத்தின் மிகப் பிரதானமான அங்கத்தவர் ஒருவரைக் கேட்டபொழுது அவர் பெருமூச்செறிந்து குவிந்த முகத்துடன் 'என்னசெய்வது எங்களுக்குச் சட்டத்தைக்கொண்டுசெலுத்தும் தத்துவமில்லை' யென்று கூறினர். எத்தனையோ இப்படியான பலவீனங்கள் உள. நாம் நமது ஞாபகத்திற்கு வந்ததை மாத்திரம் இங்கு எடுத்துக் காட்டினோம். பொதுவாகச் சொல்லுமிடில், பட்டினபரிபாலனசங்கத்தார் வேண்டியமட்டும் பேசிக் கொள்ளலாம், முடிக்கவேண்டிய தீர்மானங்களை யெல்லாம் கூசாமல் நிறைவேற்றலாம் ஆனல் அவைகளை ஒன்றையும் தொழிற்படுத்த முடியாது. இவர்களின் சுபாசகத்துவம் இவ்வளவோடு அடைக்கப்பட்டது. இவர்களுடைய தலைக்குமேல் 'லோக்கல் கவண்மென்ற் போர்ட்' என்னும் நாமத்தைக் கொண்ட உள்ளூர்ப் பரிபாலன விசாரணைச்சங்கம் ஒன்றுளது இதில் உள்ளவர்கள் யாவரும் அரசாட்சியுத்தியோகத்தர்களும் இரண்டொருவர் நியமனம் பெற்றவர்களும். இந்த "போர்ட்" டிலுள்ளவர்களின் தீர்மானமே பட்டினபரிபாலன சங்கங்கள் செய்யும் எவ்வித தீர்மானத்திற்கும் அறுதிமுடிவு. பரிபாலனசபைத்தார் எவ்வித தீர்மானத்தைச் செய்தபோதிலும் மேலேயுள்ள 'போர்ட்'டார் அதை அங்கீகரிக்கமாட்டோமெனப்பேசில் அத்துடன் அதைச் சங்கத்தார் விட்டுவிடவேண்டியதுதான் முடிவு.

சில இடங்களில்,—நம் யாழ்ப்பாணத்தில்லல—இந்தப் 'போர்ட்'டாரின கட்டளைகளை லசஷியப்படுத்தாத அத்தனை மனத்தைரியங்கொண்ட அங்கத்தவர்களுள்ள பரிபாலன சங்கங்களும் இருக்கின்றன. இப்படியானதொருநிகழ்ச்சி, பாணந்துறைப் பட்டின பரிபாலன சங்கத்திலே சமீப காலத்திலே நடைபெற்றிருக்கின்றது. பாணந்துறைச் சங்கம இப்போதுள்ள மிடியுந்தொழிலின்மையுங்காரணமாக அங்குள்ள சிலவரிகளை—கைத்தொழில் முயற்சிகளிலுள்ள வரிகளை—சிறிதுகுறைப்பதாக ஒரு தீர்மானம் பண்ணியது. உடனே மேலேயுள்ள 'போர்ட்'டார் வரிகளைக் குறைக்க உங்களுக்குத் தத்துவமில்லையென்று கூறினர். இப்படிச் சொல்வதானல் சுயவாட்சியென்ற பேரலியாயங்காட்டிக்கொண்டு யாவராலும் இகழ்ந்து பரிகசிக்கப்படும் நிலைமையில நாம இருப்பதிலும் இல்லாதிருப்பதே மேலெனறு போலும் அச்சங்கத்தின் அங்கத்தவர் ஒருவர், துணிவுகொண்டு அவ்வரிகளை எக்காலத்திலும் அறவிடுவதில்லையென ஒரு பிரேரணை செய்து அப்பிரேரணை அச்சங்கத்தினாற் சர்வாங்கீகாரமாகிவிட்டது. 'போர்ட்'டார் இதற்கென்ன செய்யப்போகிறார்களென்பது இனிமேற்றான் தெரியும்.

இதுநிற்க, சென்றபிரசுரத்தில் "கேட்பாரில்லையா?" என்ற தலையங்கத்துடன் "சுதேச நாட்டியம்" என்னும் நமது சகவர்த்தமானியில் ஒருநிருபர் எழுதிய வியாசத்தை அநுவதித்துள்ளோம். அதை அபிமானிகள் வாசித்திருக்கலாம. வாசித்தவர்களில் எத்தனையோபேருக்கு அது மனசிற் பட்டதோ, இரத்தங் கொதித்ததோ நாம் அறியேம. பகுத்தறிவென்னும் தத்துவம் படைத்த மக்கள் யாவருக்கும் அது மனதிற் பதிந்திருக்கவேவேண்டும்.

ஒருபடி பச்சையரிசி 30 சதம், ஒருபடி தேங்காயெண்ணெய் 60 சதம், இவ்வாறே சீனி, கோப்பி, தேயிலை, உழுந்து, பயறு முதலிய பொருள்கள் யாவும இப்போது விற்கும் விலைக்கு மூன்று பங்கு விலையுடையதாய் உள்ள காலத்தில், கடைகள் வைத்த அளவையும், பிரமாணத்தையும், நிறையையும், விலையையும் இப்பொழுதும் இந்தயாழ்ப்பாணப் பட்டின எல்லைக்குள் கடைவைத்திருக்கும் தேநீர்க்கடைக்காரரும், பலகாரபக்ஷணக் கடைக்காரரும் கொண்டே வியாபாரம் செய்கிறார்கள் வகைதெரியாத சனங்களும் கஷ்டப்பட்டுப் பணத்தைக் கொடுத்தே வாங்குகிறார்கள். இதைப்பற்றி யாரிடஞ் சொல்வது அரசாங்கசபைக்குச் சொல்வோமா? பட்டின பரிபாலன சபைக்குச் சொல்வோமா? 'லோக்கல் கவண்மென் போட்'டிற்குச் சொல்வோமா? பாராளு மன்றத்திற்குச் சொல்வோமா? அல்லது இப்போது நடைபெறும் வட்டமேசைச் சமாசத்திற்குச் சொல்வோமா?

ஒரு படி பச்சை யரிசியைப் 16 சதம் கொடுத்து வாங்கி, 3 சதம் கூலிகொடுத்து இடித்து வறுப்பித்துப், 6 சதத்து விறகுடன் அதை இடியப்பம் அல்லது பிட்டு ஆக்குவதேயானல், 8 பேர் முழுத் திருப்திகரமாகச் சாப்பிட்டுப் பசி தணியக் கூடியதாகவிருக்கின்றது. இந்த 8 பேரும் "இந்தியா பிராமணாள் ஒட்டல்" இருக்கும் இடத்திற்குச்சென்றால் குறைந்த தொகையாக 80 சதம் செலவு செய்தால் அரைவயிற்றுக்கு அருந்தி மரியாதையுடன் வெளியேறலாகும். கடைக்காரனின் இலாபமென்ன? 55 சதம் 25 சதத்திற்கு 55 சதம் இலாபம். இதைவிட மேலான வியாபாரம உண்டா? ஈ எஸ் எல். சி; வி. எஸ் எல். சி. 'பாஸ்' பண்ணிவிட்டுச் சந்திக்குச் சந்தி தட்டுக்கெடும் நம் நாட்டு வாலிபர்கள் இந்த இலாபத்தையேனும் உபயோகப்படுத்தலாமே!

இப்படியே ஒவ்வொரு பொருளிலும் 100க்கு 300 இலாபம் வைத்துக் கடைக்காரர் சூறையாட, ஏழைகள் ஏமாந்து பணத்தைக் கொடுக்க, இதை நீக்குவதற்கு வகைதெரியாமற் பட்டினபரிபாலன சங்கம் பதுங்க, அந்தோ! நமது கதி அதோ கதியாகக் காணப்படுகின்றதே. இவ்வாறான விஷயங்களிற் றலையிட்டுப் பொருளாதாரநிலைமையைச் சீர்ப்படுத்துவதும், வியாபாரத்தை மட்டுப்படுத்துவதும பட்டினபரிபாலன சங்கத்தின் வேலையல்லவா? பகற் கொள்ளைக்காரர் போலக் கடைக்காரர் சனங்களிடம் தோலிருக்கச் சுளை விழுங்கிக்கொண்டேயிருக்க, பாவத்திற்குப் பயந்தாவது இது விஷயத்திற் பிரவேசிக்கச் சிந்தனையற்ற பட்டின பரிபாலன சங்கம் வேறெதற்குத்தான் இருக்கின்றதோ?

இப்பொழுது தேர்தலுக்கு முற்பட்டு நிற்கும் அபேட்சகர்கள், யாழ்ப்பாணத்திலே இந்த நிலைமையும், இதுபோன்ற கூலிக்காரர் வகையிலுள்ள நிலைமையும் முன்னிருந்த ஸ்திதிப்படி ஆக்குவதற்கு யாது செய்யப்போகின்றனர் என்பதைத் தமது தேர்தலுக்குமுன் பகிரங்கமாகக் கூறட்டும். வீட்டுக்கு வீடு திரிந்து இரகசியம் பேசுவதிலும் பார்க்க இவ்வபேட்சகர்கள் இப்போது நாம் மேலேகாட்டியன போன்ற மிடிகளை, இப்பணமிடிக்காலத்திலே நீக்கி வைப்பதற்கு யாது செய்யப் போகின்றனர் என்று கூறுவதற்கு வெட்கப்படுகின்றனரா?

எதிரே வரும் இரண்டு மாதங்களிலும் இவ்வபேட்சகர்கள் பொது சனங்களுக்கு அவர்களுக்கிருக்கும் குறைகளை யெடுத்துச் சொல்லி அக்குறைகளை நீக்குவதற்குத் தாம் கையாளப்போகும் மூலங்களையும் எடுத்துரைப்பார்களென நயபுகின்றோம்.

## தானவரவு.

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கு ஞளநகையிலிருக்கும் ஸ்ரீ மாணிக்கவாசகர் கைப்பெண் ஸ்ரீமதி சின்னத்தங்கமென்பாரின் அபரக்கிரியைகளின்போது, யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்கு, அவருடைய புத்திரன் ஸ்ரீ ம. செல்வத்துரை (விதானை) அவர்களால், தானமாக அனுப்பப்பெற்ற ரூ 2 வந்ததாகக் குறித்த சபையின் தனாதிகாரி தெரிவிக்கின்றனர்.

## இல்லாததைச் சொன்ன குற்றமாம்.

மானிப்பாயிலுள்ள ஸ்ரீ C. N. தேவராஜன் என்பார், மிஸ்டர் இராசசிங்கம் என்பாரின் மனைவியார் மிஸ்டர் இராசசிங்கத்தினால் அலட்சியமாக நடத்தப்பட்டமையாலும், அப்பெண்ணுக்கு நஞ்சூட்டப்பட்டதினாலும் அப்பெண் இறந்ததாகப் பேசிக்கொள்ளுகின்றார்கள் எனப் பொலிசாருக்குத் தெரிவித்தார் என்றும், இது உண்மையல்லவென்றும் பொலிசாரால் தொடுக்கப்பட்ட வழக்கு சென்ற வியாழக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டிலே விளங்கி, அக்டோபர்மீ 6உக்குத் தவணை போடப்பட்டிருக்கிறது. பொலிசாருக்கு 10 சாட்சிகளும், எதிர்பக்கத்திற்கு 30 சாட்சிகளும் குறிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களுள் நியாயவாதிகள், வைத்தியர்கள், சமாதான நீதிபதிகள் முதலானோர் அநேகராகும்.

## அர்த்தராத்திரியில் பீடி பிடிபட்டமை.

சென்ற செவ்வாய்க்கிழமை மிகக் கடினமாகத் தாக்கிக்கொண்டுசென்ற வடமாகாணத்திலேயுள்ள தலைமைத் தடை யுத்தியோகத்தராகும் மிஸ்டர் N. சதாசிவம் பெருந்தொகையான பீடிக்கட்டுகளுடன் சோரவியாபாரிகள் ஐந்துபேரைப் பிடித்தனர். வல்லுவெட்டித்துறையிலேயுள்ள சோரவியாபாரிகள் ஏறியிருந்த ஒரு வள்ளத்தை, மோட்டர்காவல் வள்ளத்திற் சென்ற சதாசிவம் கண்டனர். உடனே அதைத் தாக்கிப் பிடிக்க ஆரம்பித்தார். அந்த வள்ளமும் ஒருமணிநேரம்வரையில் ஓட்டங்கொடுத்தது. கடைசியாக மோட்டர் வள்ளம் சமீபித்தவுடன் அவர்கள் ஒன்றுஞ் செய்ய முடியாது அகப்பட்டனர். ரூ 3000 பெறுமதியான 30 பீடிக்கட்டுகள் அந்த வள்ளத்திற் காணப்பட்டனவாம்.

# இந்தியச் செய்தி.

லண்டன் 25-9-31.

இன்று இரவு காந்திஜீ லான்காஷையருக்கு வந்து சேர்ந்தார். அவர் மிக வசதியாகப் பிரயாணம்பண்ணினார். மான்செஸ்டருக்கு அணித்தாக உள்ள அநேக புகையிரதஸ்தானங்களில் நன்கு வரவேற்று உபசரிக்கப் பெற்றனர்.

டில்லி 25-9-31.

இன்று, புதிதாக அமைப்பதாக யோசிக்கப்படும் சம்யுக்த அரசாட்சித் திட்டத்தின்படி தனுதிகாரத்தைக் கொடுக்கும் விதத்தைப் பற்றிய விவாதம் நடைபெற்று முடிந்தது. இது விஷயமாகப் பரியாலோசனைசெய்வதற்கு ஒரு சிறு சங்கம் லோட்பீல் அக்கிராசனராக விருக்க நியமனம்பண்ணப்பட்டது. இதில் 12 பேர் அங்கத்தவர்கள்.

இச்சிறு சங்கம் கூடுங் காலமாகிய அடுத்த வாரத்தில் பெரிய சங்கம் கூடமாட்டாது. இந்தச் சமையத்தில் லோட் ஷாங்கே இதுவரையில் பெரிய சங்கம் செய்தொழிந்த வேலைகளைப்பற்றிய ஓர் அறிக்கையை எழுதி முடிப்பர்.

வருப்புவாரிப் பிரச்சினையைப்பற்றிய வாதம் அடுத்த வாரத்திலே முதன் மந்திரியரின் தலைமையில் நடைபெறும்.

### பழைய நேசர்கள் சந்தித்தனர்.

லோட் ஈர்வின் அவருடைய வாஸஸ்தானமிருக்கும் ஈற்றன் ஸ்குவயர் என்னும் இடத்திலே காந்திஜீ இன்று சந்தித்தார். இருவரும் 2 மணி 20 நிமிட நேரம் வரையில் ஒருமிக்க இருந்தனர். பின்னர் "நாம் சிநேக பாவமான சகவாஸத்தை அநுபவித்தோம்: அதுமிகச்சிநேக பாவமுடையதே" என்று மஹாத்மா கூறினார்.

மஹாத்மா இடுப்பு வேட்டியும் செருப்பும் அணிந்திருந்தார். மிக்க நாகரீகமான உடை அணிந்துகொண்டு அவ்விடத்தில் நின்ற அநேக சனங்கள் அவருடையசாயலின் தோற்றத்தைக் காணுவதற்கு சனக் கூட்டத்தினிடையே காத்திருக்கின்றனர். காந்திஜீ வந்து சேர்ந்த அரைமணி நேரத்தின்பின் ஒரு பிரபல இந்தியப் பிரமுகர் அங்கு சென்றார். காந்திஜீ சாயந்தரம் 6 மணிக்கு லான்காஷையருக்குப் புறப்படுகிறார்.

### முஸ்லீம் காந்தி சம்வாதம்.

லண்டன் 23-9-31.

ஒக்டோபர்௴ 1௳ வட்டமேசைச் சமாஜப் பிரதிநிதிகளுக்கு லண்டன் வர்த்தகஆஸ்தானத்தின் கிழக்கிந்தியப் பிரிவார் ஒரு விருந்துக் கூட்டம் நடத்துவர்.

இந்திய வர்த்தக ஆஸ்தானத்தார் காந்திஜீயின் பேரிலே செப்டம்பர் 30௳ ஒருவிருந்து நடாத்துவர்.

லோட் ஈர்வின் வட்டமேசைச் சமாஜத்தின் மிகப் பிரதான பிரமுகர்களுடன் இன்று முழுவதும் கலந்துவிட்டு யோர்க்ஷயருக்குப் பிரயாணமாயினர்.

திங்கட்கிழமை சாயந்தரம் முஸ்லீம் பிரதிநிதிகள் யாவரும் காந்திஜீயைச் சந்திப்பதாக ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது. இப்படியானமுகாமுகமான சந்திப்பு இப்பிணக்கை நல்லிணக்கமாக்கக்கூடிய வழிகளையாயிருக்குமென எண்ணப்படுகின்றது. நாளைக்கு இங்குவந்து சேரும் சேர் அலி இமாம் வந்தவுடன் தேசியக்கட்சி முஸ்லீம்களின் கோட்பாடுகள் நன்கு விளக்கத்தக்கதாக விருக்கும். முஸ்லீம்களைக் கலந்துகொண்டு காந்திஜீ, பின் இந்துத் தலைவர்களைக் கலந்துகொள்வர் பின்னர் இரு கட்சியாரும் கலந்து கொள்வதற்கு இடமுண்டாகும்.

ஸ்பிறிங்வெல்

லான்காஷயர், 26-9-31.

அதிகாலையில் மஹாத்மா காந்தி ஸ்பிறிங்வெல் என்னும் தோட்டத்திலே உலாவச்சென்றார். அப்பொழுது தொழிலாளர்கள் அநேகருடன் அவர் சந்தித்தார்.

அடுத்தாற்போல, பக்கத்திலேயுள்ள நெசவு யந்திரசாலையைச் சேர்ந்த நெசவுதொழிலாளர் நால்வரை வரவேற்று உசாவினார். அவர்கள், கிழைத்தேசத்தவர்களின் போட்டியிருந்த போதிலும தாங்கள் நல்ல வேலைத்தரமான துணிகளையுண்டாக்கி நல்லவிதமாகச் சீவிப்பதுவே தங்கள் நோக்கம் என்றார்கள். இந்தியாவின் பகிஷ்காரம் தாம் தாங்கக்கூடிய அளவிற்கு மேற்பட்டுவிட்டது என்றனர்.

உரும்பராய்.

10-9-31.

ஐயா,

இவ்வூர் C. M. S. மிஷன் ஆங்கில பாடசாலை இம்மாசக் கடைசியிலிருந்து மூடப்படுமென்பது மேற்படி பாடசாலை மானேஜர் H. பீற்றேர் பெற்றோருக்கு 29-8-31-ல் விடுத்த கடிதத்திலிருந்து தெரியவருகிறது. அதிகஞ் சைவ வாசிகளுள்ள இவ்வூரில் ஓர் மிஷன் பாடசாலை அனுவசியமெனபதும, இப்பொழுது நன்கு நடைபெறும் சைவாங்கில பாடசாலை ஒன்றே போது மென்பதும் யாவரும் அறிந்த விஷயம்.

இவ்வூர்ச் சைவாபிமானிகளுட் சிலர் மேற்படி பாடசாலை நடத்துவதற்கு வேண்டிய உதவிகள் புரிய முன்வந்திருக்காவிடின், இரண்டு அல்லது மூன்று வருஷங்கட்கு முன்பே இப்பாடசாலை மூடப்பட்டிருக்கும்.

சைவாங்கிலபாடசாலையில் ஏறக்குறைய 300 மாணவர்களும், தமிழ்ச் சைவப்பாடசாலைகளிரண்டிலும் கிட்டத்தட்ட 500 மாணவர்களும் கல்விகற்கிறார்கள். மிஷன் பாடசாலை மாணவர்களின் தொகை தற்போது சைவாங்கிலபாடசாலையிலிருக்கும் தலைமையாசிரியர் இங்கு வந்தது முதற்கொண்டு குறைந்துகொண்டு வந்தது யாவருமறிந்தவிஷயம். மிஷன்பாடசாலைக்கருகில் சந்திரோதய மென்னும் சைவப் பாடசாலை ஸ்தாபித்ததும் மிஷன் பாடசாலைகளின் அபிவிருத்திற்குத் தடையாய் நேர்ந்தது. அம்மிஷன்பாடசாலையின் சமீபத்தில் வசிக்கும் மாணவர்கள் சந்திரோதய வித்தியாசாலையிற் படித்து சைவாங்கில பாடசாலையில் ஆங்கிலங் கற்க ஆரம்பித்ததால் மிஷன் ஆங்கிலபாடசாலைகளுக்குப் புதுமாணவர்கள் வந்துசேர வழியில்லாமற் போய்விட்டது.

சென்ற நாலு வருஷங்களுக்குள் மிஷன் பாடசாலையை விட்டுவந்த மாணவர்களின் தொகையும் அதிகப்பட்டமையே சைவப் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் வைத்திருக்கும அன்புக்கும் நம்பிக்கைக்கும் அறிகுறிகளாகும்.

சைவாங்கில பாடசாலை மிஷன் பாடசாலைக்குமுன ஸ்தாபிக்கப்பட்டபோதிலும், அப்பொழுது இருந்த மிஷனரிமாரின் சூழ்ச்சியால் மிஷன் பாடசாலை முதலிற் பதிவுசெய்யப்பட்டது. பின்புசைவப்பாடசாலை சிலவருஷங்களுக்குப் பதிவுசெய்யப்படாமல் வருத்தப்பட்டதற்கு மிஷன்பாடசாலை மிஷனரிமார்செய்த தடைகளே காரணமாகும். மிஷன்பாடசாலைகளின் விருத்திக்கு உதவிபுரிந்ததும், புரிவதும் சில சைவாபிமானிகளாயிருப்பது விசனிக்கத்தக்கதே.

வெளித்தோற்றத்துக்குச் சைவப்பாடசாலைகளின நன்மையிலேயே கண்ணுங் கருத்துமுள்ளவர்களெனக் காண்பித்துக்கொண்டு, தங்களால் இயன்றளவு மனத்தாலும், வாக்காலும், சில காலங்களில் பொருளாலும் உதவி புரிந்துகொண்டு அப்பாடசாலைகளின் அபிவிருத்திக்காக உழைத்தவர்களிடத்தில் அநுதாபங் காட்டிக் கொண்டிருந்த சைவாபிமானிகள் இனிமேலாவது தங்கள் முழு அன்பையும் சைவப்பாடசாலைகளில் வைத்து அதன் நன்மைக்காக உழைப்பார்களென்று நம்புகிறேம்.

இங்ஙனம்,

சைவாபிமானி.

## ஆடம்பர வாழ்வா?

காந்தியடிகள் வெறுப்பு.

கப்பல் பிரயாணத்தில் சில சம்பவங்கள்.

ஸ்ரீமான் மகாதேவ தேசாய் "யங் இந்தியா" பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறார்:—

காந்தியடிகள் கப்பலேறும் வரை அவர் பிரயாணம் நிச்சயமில்லாமலே இருந்தது. அடிகள் கப்பலேறியதும், ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகளின் சிய்லாசிருபர்கள் 'தொந்தரவுள்ள காந்தி' போய்விட்டதைக் குறித்து பெருமூச்சுவிட்டார்கள். உத்தியோக வருக்கத்தாருடைய உணர்ச்சியையும் இந்தப்பெருமூச்சு தெரிவித்ததென்றே கூறவேண்டும். எப்பொழுதும் விஷயங்களைக் கவனித்துக்கொண்டே யிருப்பதென்பது சிலருக்கு முடியாத காரியம். ஆனால் காந்தியடிகளுக்கு அதுவே உயிராயிருக்கின்றது. ஆனால், அவர் இந்தியயில் சில காலம் இல்லாமற்போனதால், இந்தியாவில் விஷயங்களைக் கவனிக்க எவரும் இல்லை என்று ஒருவரும் நினைக்கவேண்டாம். 27-8-31 தேதியிட்டு இந்திய அரசாங்கக் காரியதரிசிக்கு எழுதிய ஒரு கடிதத்தில், தேசத்தில் நடைபெற்று வரும் விஷயங்களைக் காங்கிரஸ் கவனித்துக்கொண்டு வரும் என்று கூறப்பட்டிருந்தது.

பம்பாய்த் [illegible]த்தைவிட்டு "எஸ். எஸ். இராஜபுதா[illegible] புறப்பட்டதும், அடிகளின் பிர[illegible] கல்லாரி கூறிப் பல தந்திகள் [illegible]டைத்தன. அவரில்லாக் காலத்தும், காங்கிரஸ் வேலையானது தீவிரமாக நடைபெறும் என்று பலர் எழுதியிருந்தனர். இராஜப்பிரதிநிதியும் அன்புடன் ஒரு செய்தியனுப்பியிருந்தார். ஒரு செய்தி "ஆண்டவன் உங்கள் வழியைப் பிரகாசிக்கச் செய்வாராக" என்று கூறியிருந்தது. இன்னொரு செய்தி, 'நீங்கள் வெற்றியடைந்தாலும் தோல்வியுற்றாலும் அது பெரிதாகவே இருக்கும். நீங்கள் வெற்றியடையும்படி ஆண்டவன் துணைபுரிவாராக" என்று கூறியிருந்தது. ஆனால் தம்முடைய உள்ள கிளர்ச்சியை அப்படியே தெரிவித்திருப்பதாகக் காந்தியடிகளாலேயே கருதப்பட்ட ஒரு செய்தி கிடைத்தது. குஜராத்தி கவிஞரான மேகாணி என்பார் எழுதியனுப்பிய ஒரு சிறு கவியே இச்செய்தியாகும். முதல் சமாஸ முயற்சி முறிந்துபோன ஆகஸ்ட்மாதம் 13-ந் தேதி முதல் காந்தியடிகள் மனதில் நிகழ்ந்தவைகளை அப்படியே படம் பிடித்தது போல் இந்தக் கவி இருந்தது. "பல கசப்பான பானங்களை நீங்கள் பருகியிருக்கிறீர்கள். இப்பொழுது கடைசி முறையாக விஷபானஞ் செய்யச் செல்லுங்கள். அசத்தியத்திற்கு முன்னே சத்தியத்தை, துவேஷத்திற்கு முன்னே அன்பை, மோசத்திற்கு முன்னே நாணயத்தை நிலைநிறுத்தினீர்கள். உங்களுடைய பரம சத்துருவினிடத்திலும் அவநம்பிக்கை கொள்ள நீங்கள் மறுத்தீர்கள். உங்களுக்கென்று தயாராக வைக்கப்பட்டிருக்கும் இன்னும் பல கசப்பான பானங்களைப் பருக முன்னேறிச் செல்லுங்கள். எங்களுடைய துயரங்களையும் துரதிருஷ்டங்களையும் நினைத்து நீங்கள் நின்றுபோக வேண்டாம். மகிழ்ச்சியுடன் துன்பத்தைச் சகித்துக்கொள்ள நீங்கள் எங்களுக்குக் கற்றுக்கொடுத்து விட்டீர்கள். எங்களுடைய இளகிய மனதை இரும்பாக்கிவிட்டீர்கள். நீங்கள் வெறுங்கையுடன் திரும்பினால் என்ன முழுகிப்போய்விட்டது? நீங்கள் இங்கிருந்து புறப்பட்டுச் செல்லவேண்டியதும், ஐயனே! செல்லுங்கள். சென்று, உலகத்தாருக்கு அன்பையும் சகோதரத்துவத்தையும் போதியுங்கள். மனித சமூகமானது, பலவித துன்பங்களோடு உழன்று கொண்டிருக்கிறது அவைகளுக்குப் பரிகார மருந்தை நீங்கள் எடுத்துச் செல்கிறீர்கள் என்றும் அஃது, அந்த மனித சமூகம், அறிந்து கொண்டிருக்கிறது"

காந்தியடிகள் சிம்லாவிலிருந்து புறப்படுவதற்கு முன்னர், தமக்கும், தமது பரிவாரத்துக்கும் கப்பலில் கீழ்த்தரமான ஐந்து ஸ்தானங்கள் பிரத்தியேகப்படுத்தி வைக்குமாறு பம்பாயிலுள்ள ஒரு நண்பருக்குச் செய்தியனுப்பியிருந்தார். கீழ்த்தரமான ஸ்தானங்கள் இரண்டாவது வகுப்பே என்று எங்களுக்கு அறிவிக்கப்பட்டு அப்படியே அதில் நாங்கள் சென்று அமர்ந்தோம். கப்பல் பம்பாய்த் துறைமுகத்தினின்று சிறிது தூரம் சென்றபிறகு, காந்தியடிகள் எங்கள் அறைகளில் வந்து பார்த்தார். அதிருஷ்டவசமாக, நாங்கள் இரண்டாவது வகுப்பு அறையில் இருந்தோம். அப்படியில்லாமல் கப்பல் மேற்றட்டில் பிரயாணஞ் செய்யும்படி நேரிட்டிருந்தால், எங்கள் அளவற்ற சாமான்களுடன் எப்படிப் பிரயாணஞ் செய்திருப்போமோ தெரியாது. காந்தியடிகள், எங்கள் அறைகளைப் பரிசோதனை செய்து கொண்டிருக்கும்போது, எங்களில் ஒருவர் "நாங்கள் சில மணிநேரத்திற்குள் எங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது" என்று கூறினார். "இந்தத் துணிப் பெட்டிகளையெல்லாம் எங்களுக்கு இரவல் கொடுத்தார்கள். நாங்கள் திரும்பி வந்ததும் அவைகளைத் திருப்பிக் கொடுத்து விடுகிறோம்" என்று மற்றொருவர் சொன்னார். "பல நண்பர்கள் அவர்களிடத்தில் மிகுதியாயிருந்த பல சாமான்களை எங்களிடம் கொண்டுவந்து குவித்து விட்டார்கள்" என்று பிறிதொருவர் புகன்றார். 'இங்கிலாந்துக்குச் செல்லும் நீங்கள், சில சாமான்களை எடுத்துச் செல்வது அவசியமாகும்' என்று சில நண்பர்கள் கூறினார்கள். 'அவர்கள் கூறிய சாமான்களைத் தவிர, நாங்கள் அதிகமாக ஒன்றும் எடுத்துச் செல்லவில்லை" யென்று விளம்பினார் வேறொருவர்.

எங்களுடைய இந்த உபசார மொழிகளெல்லாம் காந்தியடிகளுக்கு ஆத்திரமூட்டின. நாங்கள் கூறிய யாவும் போலிச் சமாதானங்கள் என்று அவருக்குப் பட்டது. தரித்திர நாராயணனின் பிரதிநிதியாகச் செல்லும் ஒருவருடைய துணையாளர்களாகிய நாங்கள் விலையுயர்ந்த உடைப் பெட்டிகளை, அவை கடன் சன்மானப் பொருள்களாகட்டும்; இரவற்பொருள்களாகட்டும், எடுத்துச்செல்வது அவருக்குச் சகிக்கவொண்ணாததாயிற்று. ஆகவே அவருடைய கண்டிப்பான இந்த மறுமொழிகளுக்கு எங்களில் ஒவ்வொருவரும் இரையானோம். 'தயார்ப்படுத்திக் கொள்வதற்குப்போதிய அவகாசமில்லையென்று கூறுவது சரியான சமாதானமாகாது. எவ்வித தயாரிப்பும் வேண்டியதில்லை உங்களுக்குக் கொடுக்கப்பட்ட பொருள்களையெல்லாம் நீங்கள் வாங்கி வைத்துக் கொண்டதைவிட, இவைகளெல்லாம் எங்களுக்குத் தேவையில்லையென்று அந்த நண்பர்களிடத்தில் நீங்கள் சொல்லியிருக்கலாம். சொல்லிவிட்டு, பம்பாயிலுள்ள ஸ்ரீமான் ஜிராஜானியினுடைய கதர் கடையிலிருந்து, உஷ்ணத்தரத்துக்கு சில உடைகளை நீங்கள் வாங்கிக்கொண்டிருக்கலாம். அதைவிட்டு நீங்கள், சிறிதுகூட யோசனையில்லாமல், கிடைத்தனவற்றையெல்லாம் திரப்பிக்கொண்டு விட்டீர்கள். இங்கிலாந்தில் ஐந்துவருஷம் நல்லதாக உத்தேசம் போலும்; நமக்குத் தேவையானவற்றை நா[illegible]ம் இங்கிலாந்திலேயே பெற்றுக் கொள்ளலாம[illegible]றும் இந்தியாவுக்குத் திரும்பி வந்ததும் அ[illegible]களை ஏழை ஜனங்களுக்குக் கொடுத்துவி[illegible]ம் என்றும் உங்களுக்கு நான் கூறியிருக்கி[illegible]

(தொடரும்.)

நவசக்தி.

## தேகவியோகம்.

வட்டுக்கோட்டையைச் சார்ந்தவரும் யாழ்ப்பாணப்பட்டினத்திலே நெடுங்காலமாகக் கண்ரோகங்களுக்கு மிக்க திறமையுடன் வைத்தியஞ்செய்து கொண்டிருந்து சமீபத்தில் மரணமடைந்தவருமாகிய ஸ்ரீ கார்த்திகேய ஆசாரியாரின் மகன் ஸ்ரீ அம்பலவாண ஆசாரியார் சென்ற திங்கட்கிழமை சீர்வேலியிலே தமது பத்தினியாரின் இல்லத்திலே தேகவியோகமாகி விட்டனரென்னும் துக்க சமாச்சாரம் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீ அம்பலவாண ஆசாரியார் தம்மரணநாளுக்குச் சிலவாரங்களுக்கு முன்னரேயே தாம் கண்ரோக வைத்தியஞ் செய்துகொண்டிருந்த வண்ணார்பண்ணை வெள்ளாந்தெருவை விட்டுச் சென்றனர். தமது தந்தையைப் போலவே இவரும் மிகத்திறமையோடு கண்ரோக வைத்தியஞ் செய்து விளங்கினர். இவர் மிக்க கடவுட் பக்தியும் ஆசாரசீலமும் உடையவர். வெள்ளாந்தெருவிலே யுள்ள அங்குசபாசப் பிள்ளையார் கோவிலைப் புனருத்தாரணஞ் செய்வதற்குப் பெருங் காரணராயிருந்ததுமன்றி இவர் அந்த அயலவர்களிடம் சென்று சென்று மாதா மாதம் கோவிலுக்குப் பொருள் சேகரித்து அக்கோவிற் பூசை கிரமமாக நடைபெறுவதற்கும் உறுதுணையா யிருந்தவர். அன்றியும் தமது வைத்தியஞ் செய்யும் நேரம் போக மீதி நேரங்களைக் குறித்த கோவிலுக்குப் பணியாற்றுவதிலேயே செலவு செய்து வந்தவர். இவருடைய ஆன்மா சாந்தியடைவதாக.

இவருடைய தந்தையார் நூதனச் சித்திரங்கள் ஆக்குவதில் மிக்க திறமையும் வாய்ந்தவர். அவர், பனையின் வருப் பிரயோசனங்களைக் காண்பிக்கும் ஒரு சிறிய பனையைச் செய்து கொழும்பு நூதனசாலைக்கு சேர். வில்லியம் நுவைனம் மூலமாக அனுப்பியுள்ளார். அப்பனை இன்னும் அங்குள்ள ஏனைய காட்சிப் பொருள்களுள் மிக விருப்பப் பார்க்கத்தக்க தோன்றக விருக்கிறது தேங்காய்ச் சிரட்டை, பாக்கு, பனை ஓலை, பலவர்ண மரங்களை இணைத்தல்முதலிய பொரல் வகைகள் செய்வதில் மிகுந்திறனும் அவர் இருந்தனர்.

—இராமநாதன் கல்லூரியிற் பயிற்றப்பட்டு தற்காலம் உடுவில் சுப்பிரமணிய வித்தியாசாலையில் படிப்பித்தவரும் ஸ்ரீ நா. செல்லப்பா என்பவரின்புத்திரியுமாகிய ஸ்ரீமதி செ.பூபதிப்பிள்ளை சிலகாலம் தம்மைப் பிடித்த நோய் காரணமாக சென்ற புதன்கிழமை சாயந்தரம் இவவுலகவாழ்வை நீத்தனர். இறக்கும்போது வயது 24. நமது காரியாலயத்தின் தொழிலாளியாயிருக்கும் ஸ்ரீ அ. இரத்தினம் என்பவருக்கு இவர் மைத்துனியாகும். இவரை இழந்து துன்புறும் சுற்றத்தாருடன் நாமும் அநுதாபப்படுகிறோம். —கடிதம்.


காசி பட்டாடை

சுதேசத்துணிகளை ஆதரியுங்கள்

[illegible]

புதிய கேட்லாக் இதோ!

கே.என்ஸ். முத்தையா கம்பெனி

சில்க் ஹவுஸ், காசி.

(Y. 19 28 9·31 to 27 9 32)




தாமே பாவித்துக் கொள்ளக்கூடிய 8வகையான மருந்துகள் இதில் அடங்கியுள்ளன.

ஒரு பெட்டியின் விலை ரூபா 3 அணா 8.

விட்டில்ஸ்

ஓறியென்டல் பாம் விற்குமிடம்:

பெரியதெரு,

மணிக்கூட்டுச்சந்தி,

கொழும்பு.

(தபால்பெட்டி இல. 298.)

அல்லது

விட்டில்ஸ்

ஓறியென்றல் பாம் & பார்மசியூரிக்கல்ஸ் லிமிடெட்

தபால் பெட்டி இலக்கம் 67,

சென்னபட்டணம்.

Y 9 1.31—12 32.

